ISSN:2582-9599



# மிகச்சிறந்த நாடகாசிரியர் - ஜார்ஜ் பெர்னார்ட் ஷா (George Bernard Shaw)

முனைவர் கு. கவிதா

உதவிப்பேராசிரியர், ஸ்ரீ ஐயப்பா மகளிர் கல்லூரி,

சுங்கான்கடை. kavitha1741987@gmail.com

12

**ஆய்வுச் சுருக்கம்**

உலகின் தலைசிறந்த நாடகாசிரியர்களுள் ஜார்ஜ் பெர்னார்ட் ஷாவும் ஒருவர். ஷேக்ஸ்பியருக்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றக் கூடிய நாடகப் புலவர். இவர் எழுதியுள்ள நாடகங்கள் ஏராளம். பல்வேறு எதிர்ப்புக்களையும் தாண்டி நகைச்சுவையாகவும், நையாண்டியுடனும் நாடகம் எழுதுபவர். இவர் எழுதிய புனித ஜோன் என்ற நாடகத்திற்கு 1925இல் நோபல் பரிசு கிடைத்தது.

திருமதி வாரனின் தொழில் நாடகம் வெளிவந்த போது இந்நாடகத்திற்கு பல்வேறு எதிர்ப்புகள் கிளம்பின. ஏனென்றால் வாரன் என்பவர் தனது மகளை ஒரு பட்டதாரியாக்குகிறாள். ஆனால் பட்டம் பெற்ற அந்த மகள் தன் தாய் விபசார விடுதி நடத்தி, அத்தொழிலில் கிடைக்கும் வருவாயிலிருந்து தன்னைப் படிக்க வைத்தாள் என்னும் தகவலைக் கேட்டதும் அந்தப் பெண் துடித்துப் போகிறாள். அவள் தன் தாயை விட்டுப் பிரிகிறாள்.

அதற்கு பின் இனிய நாடகங்கள் என்றும், கசப்பு நாடகங்கள் என்றும் சில நாடகங்களை இணைத்து வெளியிட்டார் ஷா. அவற்றுள் இனிய நாடகப் பகுதியில் காதற்கலைஞன் (The Philanderer) என்ற நகைக்சுவை நாடகம் இரண்டாவதாகும். மனைவி யிழந்தோர் இல்லங்கள் முதல் நாடகமாகும். நான்கு அங்கங்கள் கொண்ட காதற் கலைஞன் ஏறத்தாழ ஒரு சுயசரிதையின் பாணியில் செல்கிறது. கணவன் மனைவியிடையே உண்டாகும் காதல் விவகாரங்களை நகைச்சுவையில் வடித்திருக்கிறார் ஷா. காதல் விளையாட்டில் கைதேர்ந்த கலைஞனாக லியோனார்டு சார்ட்டரிஸ் என்பவனை உலவவிட்டு நையாண்டி செய்கிறார் ஷா. இந்நாடகம் 1898இல் நூலக வெளியிடப் பெற்று, அதே ஆண்டில் மேடையிலும் அரங்கேறியது.

இனிய நாடகப் பகுதியில் வெளிவந்த மற்றொரு நாடகம் மனிதனும் துப்பாக்கியும் என்பதாம். இது 1894 ஆம் ஆண்டில் மேடையில் அரங்கேற்றப் பெற்ற மூன்றங்க நகைச்சுவை நாடகமாகும். ஆயினும் இது 1898 இல் தான் நூலாக வெளியிடப்பெற்றது. 1885க்கும் 1886க்கு மிடையிலான காலகட்டத்தில் பல்கேரியாவில் நிகழ்ந்தாக நாடகம் செல்கிறது. இதே நாடகம் சாக்லெட் வீரன் (Chocolate Soldier) என்ற தலைப்பில் இசை நாடகமாகவும் தயாரிக்கப்பெற்றது. நாடகம் முழுவதும் அரசியல் நையாண்டிகள் வெடிச்சிரிப்பாய் வெடிக்கிறதைக் காணலாம். ஷாவின் கைவண்ணம் நாடகத்தில் பதிந்துள்ளதையும் காணமுடிகிறது.

அதற்கு பின் ஷாவின் இனிய நாடகப் பகுதியில் ஒன்றாக வெளியிடப் பெற்ற மூன்றங்க நகைச்சுவை நாடகம். காண்டிடா (Candida) என்பதாகும். இது 1895 இல் மேடையில் நடிக்கப் பெற்று, 1898 இல் நூலாக வெளியிடப்பெற்றது. மண வாழ்க்கையும் ஒழுக்கமும் அன்றாட வாழ்க்கையில் உண்டாகக்கூடிய இயல்பான நிகழ்ச்சிகளே என்பதைத் தமக்கே உரித்தான நகைச்சுவை

நடையில் அற்புதமாக விவரித்துள்ளார் ஷா. இப்ஸனின் லவ்ஸ் காமெடி என்ற நாடகத்தை நினைவூட்டும் வகையில் காண்டிடா அமைந்துள்ளது என்பது சில விமர்சகரின் கூற்றாகும்.

ஜுலியஸ் சீஸர், ஆண்டனியும் கிளியோபாத்ராவும் ஆகிய இரு நாடகங்களைப் புனைந்துள்ள ஷேக்ஸ்பியர், சீஸரின் பாத்திரத்தைப் படைத்துள்ள விதத்திற்கு மாறுபட்ட கோணத்தில் ஷா தமது சீஸரும் கிளியோபாத்ரா நாடகத்தில் படைத்திருக்கிறார். புராதன நிகழ்ச்சிகளைப் புதிய வெளிச்சத்தில் நோக்குகின்றார் பெர்னார்ட்ஷா. ஷேக்ஸ்பியரின் பாத்திரப்படைப்பில் அக்காலத்திய அரண்மனை வாசிகளின் பெருமைகளைப் பிரதிபலிப்பதாய் அமைத்திருந்தார் ஷேக்ஸ்பியர். ஆனால் ஷாவோ இருபதாம் நூற்றாண்டடின் சமுதாய ஏற்றத்தாழ்வுகளைத் தமது பாத்திரங்களின் வாயிலாகவே பேச வைத்தார். முற்போக்குச் சிந்தனையை நாடகத்தில் படரவிட்டிருந்தார் ஷா. இன்னும் சொல்லப் போனால் ஷாவின் எண்ணங்களே அவரது பாத்திரப்படைப்பின் மூலம் வெளிப்பாடு ஆயின எனலாம். கி.மு.48இல் நிகழ்வதாக எழுதப்பெற்ற இந்நாடகத்தில் கி.பி. இருபதாவது நூற்றாண்டின் காலகட்டத்தைக் கண்ணாடியாக்கிக் காட்டியிருக்கிறார் பெர்னார்ட் ஷா அவர்கள்.

அதன்பின் 1903 ஆம் ஆண்டில் மனிதனும் அதிமனிதனும் (Man and Superman) என்ற நகைச்சுவை நாடகம் வெளிவந்தது. பெர்னார்ட் ஷா மிகச்சிறந்த சிந்தனையானர் என்பதோடு கற்பனை வளமிகுந்த நாடகாசிரியர் ஆவார் என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்நாடகம் விளங்குகின்றது. அரும்பெரும் தத்துவ விளக்கங்கள் இந்நாடகத்தில் நிறைந்துள்ளன. மதம், பெண் வர்க்கம், பாலுணர்வு, திருமணம் ஆகிய பிரச்சினைகள் நகைச்சுவையுடன் அலசப்படுவது இந்நாடகத்தில் காணப்படும் ஒரு சிறப்பம்சமாகும்.

**திறவுச் சொற்கள்**

இனிய நாடகம், கசப்பு நாடகம், தொழில் நாடகம், காதற்கலைஞன், நகைச்சுவை நாடகம்.

**முன்னுரை**

உலகின் தலைசிறந்த நாடகாசிரியர்களுள் ஜார்ஜ் பெர்னார்ட் ஷாவும் ஒருவர் எனக் கூறுவதைவிட குறிப்பிடத்தகுந்தவர் எனக் கூறுவது பொருத்தமானதாகும்.. ஷேக்ஸ்பியருக்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றக் கூடிய நாடகப் புலவர் ஷா என்றால் மிகையாகாது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிறந்து இருபதாவது நூற்றாண்டின் முற்பகுதி முழுதும் வாழ்ந்து, புகழின் உச்சியில் உலா வந்தவர் ஷா என்பது உண்மை.

**பிறப்பும் இளமையும்**

1856 ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 26ஆம் நாளன்று, அயர்லாந்தின் தலைநகரான டப்ளினில் ஓர் எளிய குடும்பதில் பிறந்தார் ஜார்ஜ் பெர்னார்ட் ஷா. தமது பதினைந்தாவது வயதில் பள்ளிப்படிப்பை பாதியிலேயே நிறுத்திவிட்டு, வீட்டுமனைத் தரகர் நிறுவனத்தில் பணியாற்றப் போய்விட்டார். அவரது அன்னை ஒரு பண்பட்ட இசைவாணி என்பதால் தமது பிள்ளையை ஒரு நாடகக்குழுவின் பாடல் குழுவில் சேர்த்துவிட்டாள். ஆனால் ஷாவுக்கு அத்துறை பிடிக்கவில்லையென்பதால் அதையும் புறக்கணித்து விட்டு, இலண்டனில் அவரது அன்னையாருடன் வசித்து வரலானார். அங்கு அவர் 1876 முதல் 1883 வரையில் வாழ்ந்து வந்த அந்தக் காலகட்டத்தில்தான் அவருக்கு எழுத்துத் துறையில் நாட்டம் சென்றது. அக்கால கட்டத்தில் அவர்

ஐந்து நாவல்கள் எழுதி முடித்தார். ஆனால் ஒன்றேனும் நூலாக வெளிவரவில்லை. எனினும் ஷா மனமுடைந்து போகாமல், பிரிட்டிஷ் மியூசியத்திற்குச் சென்று வருவதன் மூலம் தமது கல்வியறிவை உயர்த்திக் கொண்டார். சில நேரங்களில் அங்கு அவர் இலக்கியம் தொடர்பாக விவாதங்கள் நடத்தப் போய், அவருக்கு ஹென்றி ஜார்ஜ் என்ற அமெரிக்கச் சமுதாயச் சிற்பியின் அறிமுகம் கிடைக்கப்பெற்றார். அது முதல் அவருக்கு சமுதாயச் சீர்திருத்தத்தில் நாட்டம் சென்றது.

**நாடகப் புலமையை வளர்த்தல்**

எழுத்துத்துறையில் ஷாவுக்கு மிகுந்த திறமை ஏற்படிருந்ததைக் கொண்டு, The Pall Mall Gazette என்ற இதழில் அறிவுப்பூர்வமான கட்டுரைகள் எழுதி வரலானார். 1885 முதல் 1888 வரையிலும் அவ்வாறு எழுதி வந்த ஷா, அதற்கிடையே The World என்ற புகழ்பெற்ற பத்திரிகையிலும், The Star என்ற இதழிலும் இசை, நாடகம் முதலியவற்றின் விமரிசகராகவும் பணியாற்றி வந்தார். 1895 முதல் 1898 வரையில் The Saturday Review என்ற இதழில் நாடக விமர்சகராகச் சேர்ந்து பணியாற்றினார் ஷா. அந்தக் காலகட்டத்தில்தான் அவர் ஷேக்ஸ்பியரின் நாடகங்களை ஆழமாகப் படித்தார். ஷேக்ஸ்பியருக்கே சவால் விடும் அளவுக்கு அவர் நாடகப் புலமையை வளர்த்துக் கொண்டதும் அக்காலக்கட்டத்தில் தான்.

அதற்கிடையே மாபெரும் நாடக விமர்சகரான வில்லியம் ஆச்சரின் தொடர்பு ஷாவுக்கு ஏற்படவே, அவரின் தூண்டுதலாலும் உற்சாகத்தாலும் ஒரு புதிய உத்வேகம் பெற்று நாககமெழுதுவதில் ஆர்வம் கொண்டார். இப்ஸனின் நாடகப் படைப்புகளில் ஷாவுக்கு ஒரு கவர்ச்சி ஏற்பட்டது. அதன் பயனாய் அவர் கிப்ஸனின் கொள்கையை விளக்கம் விரிவான நூலொன்றை எழுதினார் ஷா. The Quintessence of Ibsenism என்ற அந்நூலின் மூலம் ஷாவிடம் மறைந்து கிடந்த எழுத்துவன்மையும், சிந்தனா சக்தியும் நாடறிய வெளிப்பட்டன.

**ஷாவின் திறமையைக் கண்டு வியந்தவர்கள்**

ஷாவின் திறமையைக் கண்’டு வியந்தவர்களுள் ஜெ.டி.கீரியன் என்ற பிரபல நாடகத் தயாரிப்பாளரும் ஒருவராவார். அவர் கிப்ஸனின் பூதங்கள் (Ghosts) என்ற நாடகத்தை நடத்திப் பிரபலமடைந்திருந்தார். அவர் ஷாவிடம் நாடகமெழுதுமாறு வேண்டினார். ஐந்தாண்டுகளுக்கு முன் வில்லியம் ஆர்ச்சருடன் இணைந்து ஷா எழுதியிருந்த மனைவியிழந்தோரின் இல்லங்கள் (Widower's Houses) என்ற நாடகத்தை கிரீயனுக்குத் தந்தார் ஷா. அது 1892இல் முதன் முதலாக மேடையேறியது. இந்நாடகத்தின் கதை வில்லியம் ஆச்சரால் உருவாக்கப் பெற்ற போதிலும், அதை ஓர் ஒப்பற்ற நாடகமாகக் கட்டமைத்தவர் பெர்னார்ட் ஷாவே. மூன்று அங்கங்களுடைய இது ஒரு நகைச்சுவை நாடகமாகும். பணக்காரர்களின் போலிக் கவுரவம் மென்மையாக நையாண்டி செய்யப்படுவது நாடகத்தின் சிறப்பு அம்சமாகும்.

**ஷாவால் வெயிடப்பட்ட நாடகங்கள்**

ஷா வெளியிட்ட நாடகம் திருமதி வாரனின் தொழில் (Mrs. Warren's Professor) 1893 இல் வெளிவந்தது. ஆனால் அது 1902 வரையிலும் மேடையேற்றப்படவில்லை. அப்போதைய சேம்பர்லெய்னின் அரசு அந்நாடகத்திற்கு அனுமதி வழங்க மறுத்துவிட்டது. வாரன் என்பவர் தனது மகளை ஒரு பட்டதாரியாக்குகிறாள். ஆனால் பட்டம் பெற்ற அந்த மகள் தன் தாய் விபசார விடுதி

நடத்தி, அத்தொழிலில் கிடைக்கும் வருவாயிலிருந்து தன்னைப் படிக்க வைத்தாள் என்னும் தகவலைக் கேட்டதும் அந்தப் பெண் துடித்துப் போகிறாள். அவள் தன் தாயை விட்டுப் பிரிகிறாள். அவள் இறுதியாகக் கூறிய வார்த்தை "உன் தொழில் என் தொழில் ஆகாது. அது போலவே நீ செல்கின்ற பாதையும் என் பாதையாகாது".

இந்த நாடகத்திற்கு ஏராளமான எதிர்ப்புகள் கிளம்பின. நாடகம் நடிக்கப்பெறக் கூடாது எனத் தடை விதிக்கப்பட்டது. ஒழுக்கத்தைக் குலைப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டது. ஆயினும் ஷா இந்நாடக நூலின் முன்னுரையில் தெளிவானதொரு விளக்கம் கூறியிருந்தும் அது அம்பலத்திற்குச் சரிப்பட்டு வராமல் போயிற்று. "ஏழைப் பெண்கள் கற்பை இழப்பதைக் காட்டிலும், கொள்கைப் படிப்பற்ற போலிப் பணக்காரர்கள் இந்தச் சமுதாயத்திற்கு அபாயமிக்கவர்கள்" என்பது அந்நாடகத்தின் மையக்கருத்தாகும்.

"இன்று தமிழ் இலக்கியத்துக்கும் தமிழ்த் திரைப்படத்துக்கும் தமிழ் நாடகத்துக்கும் கிட்டியுள்ள அவல நிலை போல் வேறு எந்த இந்திய மொழியின் கலைத்துறைக்கும் ஏற்படவில்லை என்பது கசப்பான உண்மை."[1]

**சாத்தானின் சீடன் (The Devil's Disciple)**

சாத்தானின் சீடன் என்ற நாடகம் பெர்னார்ட் ஷாவின் மூன்றங்க நாடகமாகும். 'மெலோ - டிராமா', எனப்படும் வகையினைச் சார்ந்த இந்நாடகம் 1897 இல் மேடையில் முதன்முதலாக அரங்கேற்றமாயிற்று என்றாலும், 1901ஆம் ஆண்டில்தான் நூலாக வெளியிடப் பெற்றது. இந்நாடகத்தில் வரும் பாத்திரங்கள் இயல்பாகப் படைக்கப்பட்டுள்ளன.

**சீசரும் கிளியோபாத்ராவும் (Caesar and Cleopatra)**

சீசரும் கிளியோபாத்ராவும் என்ற ஐந்தங்க நாடகம் பெர்னார்ட் ஷாவின் படைப்புகளில் சிறந்ததென மதிக்கப்படுகிறது. ஷேக்ஸ்பியரைவிட ஷாவின் கைவண்ணம் இந்நாடகத்தில் கூடுதலாகப் பளிச்சிடுவதாக விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்தனர். பெர்னார்ட் ஷா இந்நாடகத்திற்கென எழுதியிருந்த முன்னுரையில் இக்கருத்தை வெளிப்படையாகவே தெரிவித்துள்ளார். இந்நாடகம் 1899 ஆம் ஆண்டு வெளியிடப் பெற்று 1901 இல் மேடையில் அரங்கேற்றம் செய்யப்பெற்றது. 1898 இல் ஷா திருமணம் புரிந்துகொண்டார். தேனிலவு அனுபவித்த அந்த இனிய காலகட்டத்தில்தான் சீஸரும் கிளியோபாத்ராவும் நாடகமாக இயற்றப்பெற்றது.

**மேஜர் பார்பரா, மனிதனும் அதிமனிதனும்**

1905 இல் வெளியான மேஜர் பார்பரா, பெர்னார்ட் ஷாவின் சீரிய சிந்தனையினின்றும் உருவாக்கப்பெற்ற அற்புத நாடகமாகும். இந்நாடகத்தில் நீண்டதொரு முன்னுரை வழங்கியிருக்கும் ஷா தமக்கே உரித்தான விதத்தில் நகைச்சுவையுடன் கூடிய அரிய கருத்துகளை வெளியிட்டிருக்கிறார். பணம் நல்லதையும் செய்யும் தீமையும் இழைக்க வல்லது என்பதற்கான விளக்கம் கோடி பெறும் எனலாம். பணமானது ஆரோக்கியம், பலம், பெருமை, தயாளம் ஆகியவற்றிற்குப் பிரதிநிதியாகச் செயல்படுவது போலவே ஆரோக்கியமின்மை, பலவீனம், அபவாதம், இழிவு, அவக்கேடு ஆகியவற்றின் பிரதிநிதியாகவும் செயல்படும் தன்மை வாய்ந்ததாகும் என்பது போன்ற சிந்தனைத் துளிகள் காணக் கிடக்கின்றன.

அதற்கிடையே 1903 ஆம் ஆண்டில் ஷாவின் மனிதனும் அதிமனிதனும் (Man and Superman) என்ற நான்கங்க நகைச்சுவை நாடகம் வெளிவந்தது. அந்நாடகம் அதே ஆண்டில் மேடையிலும் அரங்கேறியது.

**மருத்துவரின் மனக்குழப்பம் (The Doctor's Dilemma)**

இந்நாடகம் பெர்னார்ட்ஷாவின் கைவண்ணத்திற்கோர் எடுத்துக்காட்டாக விளங்கும் நாடகமாகும். இதை ஒரு இன்பியல் நாடகமாகவும் கொள்ளலாம். துன்பியல் நாடகமாகவும் கொள்ளலாம். ஆயினும் இது ஒரு துன்பியல் நாடகமாகவே முத்திரையிடப்பட்டுள்ளது. ஐந்தங்களுடைய இந்நாடகம் 1906 ஆம் ஆண்டில் முதன்முதலாக மேடையேற்றப்பட்ட போதிலும் நூலாக வெளியிடப்பெற்றது. 1911ஆம் ஆண்டில்தான் ஷாவின் வழக்கமான நையாண்டித்தனத்துடன் கூடிய கருத்தாழ மிக்க உரையாடல்கள் நாடகம் முழுவதும் பரவலாகக் காணப்படுகின்றன. மருத்துவர்களினூடே நிகழும் ‘கலந்துரையாடலில்’ மருத்துவர் தொழிலில் மலிந்துள்ள நிஜ விஷயங்களைப் பகிரங்கமாக அவசுவது ஷாவுக்கக் கைவந்த கால என்பது புலனாகிறது. இதில் நடமாடும் பாத்திரப் படைப்புகள் அனைத்துமே அமரத்துவம் வாய்ந்தவை எனக் கூறுவது மிகையாகாது. இந்நாடகம் உலகமுழுவதும் பலமுறை மேடையேற்றப்பட்டுள்ளதே இதன் சிறப்பம்சமாகும்.

இக்கால நாடகங்களின் பொதுவான அம்சம் ‘Total Theatre’ என்பது. வெறும் இலக்கிய அனுபவத்துக்காக மட்டும் நாடக ஆசிரியர்களைப் பற்றி Peter Brook என்ற பிரபல நாடக இயக்குநர் கூறுகிறார்.

“He is a poet, but now a poet of words, he is a poet of words acted, of sconces- set, of players performing!” Samuel Backetto -ன் waiting for Go dot இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. சொற்கள் காட்சிகளுடன் பிரிக்க ஒண்ணாதபடி இணைந்து உணர்ச்சிகள் கதாபாத்திரங்களின் பாவனை மூலம் உருவாக்கிப் பின் சொற்களாக வெளிவந்து இந்நிலையில் இவை அனைத்தும் ஓர் இசை ஒழுங்குடன் அமைகின்ற கட்டுப்பாடே சூழ்நிலையே நவீன நாடக அமைப்பாகும். நவீன நாடகங்கள் வெற்றி பெறுவதற்குக் கதாசிரியன் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் அவ்வாசிரியனின் தகுதிக்கு இணையான நாடக டைரக்டர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.”[2]

**ஆண்ட்ராக்கிள்ஸீம் சிங்கமும் (Androcles and the Lion)**

இந்த ஈரங்க நாடகம் முதன்முதலாக ஜெர்மன் தலைநகரமான பெர்லினில்தான் அரங்கேறியது. 1912ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 25ஆம் நாள் பெர்லினில் முதன்முறையாக மேடையேற்றப்பட்ட பின்பு, 1913 செப்டம்பர் 1இல் இலண்டன் மாநகரில் நடத்தப்பெற்றது. அதையடுத்து ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் இந்நாடகம் பலமுறை மேறையேற்றப்பட்டது. அமெரிக்காவில் 1915 ஜனவரி 27இல் நியூயார்க் நகரிலுள்ள பிரபல நாடக அரங்கில் அரங்கேற்றமாகிப் பல நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**பிக்மாலையன் (Pygmalion)**

இது ஐந்து அங்கங்களில் எழுதப்பெற்ற இன்பியல் நாடகமாகும். 1913ஆம் ஆண்டில் முதன்முறையாக மேடையேற்றப்பட்ட இந்நாடகம் அடுத்த ஆண்டில்தான் நூல் வடிவம் பெற்று வெளியிடப் பெற்றது. இந்நாடகத்திற்கு ஒரு தனிச்சிறப்பு என்னவெனில், இது ஒரே சமயத்தில் பல

நாடுகளின் மேடைகளை ஆக்கிரமித்துக் கொண்டதுதான். 1913 அக்டோபர் 16இல் வியன்னாவில்தான் முதன்முதலாக அரங்கேற்றம் செய்யப்பெற்றது. அதே காலகட்டத்தில் பெர்லினிலும் நடத்தப் பெற்றது. 1914 ஏப்ரல் 11இல் இலண்டன் மாநகரில் மேடையில் ஏறிய போது அக்காலத்திய பிரபல நட்சத்திர நடிகரான பிர்பாம் ட்ரீயும், முன்னணி நட்சத்திர நடிகையான திருமதி பாட்ரிக் காம்பெல்லும் பிரதம பாகத்தில் தோன்றி நடித்தது பெருமைக்குரிய விஷயமாகும். உலகப் புகழ்மிகுந்த நாடகங்களில் ஒன்றாக இந்நாடகம் போற்றப்படுகின்றது. அண்மைக் காலத்திலும் இந்நாடகம் அமெரிக்காவிலும் சரி ஐரோப்பாவிலும் சரி வெற்றிகரமாக மேடையேற்றப்பட்டு வருகின்றது. இரசிகர்களும் இதைப் பலமுறை சளைக்காமல் பார்த்துச் சுவைக்கின்றனர். புகழ்மிக்க நடிக நட்சத்திரங்கள் இதில் போட்டி போட்டுக் கொண்டு நடிப்பதையும் காண்கின்றோம். இதே நாடகம் மைஃபேர் லேடி (My Fair Lady) என்ற பெயரில் இசை நாடகமாக நடத்தப்பெற்றுப் பெரும்புகழினை எய்தியது. அமெரிக்காவில் 2281 முறையும், லண்டனில் 2281 முறையும் மேறையேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

“நாடகப் போக்குப் பாடல்கள் என்பவை தனிச்சிறப்பு வாய்ந்தவை. இதில் பாத்திரங்களே பேசுவர். பாடலியற்றிய புலவரின் கூற்று ஆண்டு இருக்காது. இத்தகைய பாடல்களுக்குச் சங்க இலக்கிய நூலின் ஒன்றாகிய கலித்தொகை சிறந்த எடுத்துக்காட்டாகும். இதிலமைந்த பல பாடல்களில் பாத்திரங்களின் உரையாடல் அமைந்துள்ளது. அங்கும் புலவரின் கூற்று இல்லை. இத்தகைய பாடல்களைத் தன்னுணர்ச்சிப் பாடல் வகையில் சேர்க்கின்றனர். இப்பாடல்களில் தலைவி, தோழி, செவிலி போன்ற பாத்திரங்கள் உரையாடிக் கொண்டிருப்பதைக் காண முடிகிறது. இப்பாடல்களை நாடகப்பாடல் (Dramatic Poetry) என்றும், நாடகக் கதைப்பாடல் (Dramatic Lyric) என்றும் கூறுவர்.”[3]

**ஹார்ட் பிரேக் ஹவுஸ் (Heart Break House)**

‘திகைப்பூட்டும் வீடு’ எனப் பொருள்படும் இந்நாடகம் ஷாவின் மூன்றங்க நாடகமாகும். கிரஷ்ய பாணியில் அமைந்துள்ள இந்நாடகத்தை ஷா 1913 இல் எழுதத் தொடங்கிய போதிலும் 1919 இல் தான் இதை உருப்படியாக முடித்து மேடையேற்ற முடிந்ததாம். அதற்குக் காரணம் இடையிலே மூண்ட முதல் உலகப்போர் எனக் கூறப்படுகிறது. அதற்கேற்றாற்போல, நாடகமும் முதல் உலகப்போரின் சூழ்நிலையையே மையமாகக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இது 1919 ஆம் ஆண்டு நூலாக வெளியிடப்பெற்று, ஓர்ஆண்டுக்குப் பின் முதன்முறையாக மேடையில் அரங்கேறியது.

**மீண்டும் மெதூஸலாவுக்கு (Back to Methuselah)**

இந்த நாடகம் பெர்னார்ட் ஷாவின் ‘பெரிய’ நாடகம் எனக் கூறுவது பொருத்தமாயிருக்கும். ஐந்து பாகங்களும் மூன்று அங்கங்களும் கொண்ட இந்நாடகம் 1921ஆம் ஆண்டில் நூலாக வெளிவரப்பெற்றது. அதற்கடுத்த ஆண்டில்தான் இது முதன்முறையாக மேடையேறியது. கி.மு.4004 இல் தொடங்கி, கி.பி.31,920 இல் நாடகம் முடிவதாக அமைந்துள்ள இது ஒரு புதுமையான நாடகம் எனக் கூறுவதிலும் தவறில்லை. ஷாவின் ஆழ்ந்தகன்ற கற்பனை வளத்திற்கு

இந்நாடகம் ஒரு சிறந்த உதாரணமாகக் கொள்ளலாம். 30,000 சொற்கள் கொண்ட நீண்ட முன்னுரையுடன் கூடிய இந்நாடகம் மொத்தம் 90,000 சொற்களையுடையதாயிருக்கிறது. இது ஒரு வெற்றிகரமான நாடகம் என்பதற்கொப்ப, இன்றுவரை உலகமெங்கும் பரவலாக மேடையேறிய வண்ணமாயுள்ளது என்பது உண்மை. மேடையில் காண்பதை விட, படிப்பதில்தான் சுவை மிகுதி என்பதும் உண்மை.

"நாடகத் தனிமொழிப் பாடல் என்பது நாடகப் பாடல்களில் பாத்திரங்கள் தனியே பேசுவதுபோல அமைவதாகும். ஒரு பாத்திரம் தன் உணர்ச்சியையோ எண்ணங்களையோ தனியே கூறிக் கொள்வதாக அமையும். இதனை நெஞ்சொடு கிளத்தல் என்ற துறைப்பாக்களுள் இணைப்பர். பழைய கூத்து நாடகங்களில் இம்முறை அமைந்திருப்பதைக் காணலாம். இராமநாடகத்தில் இராமன் மட்டும் தனியே வந்து தான் வந்த காரணத்தையோ அல்லது தன்னுடைய எண்ணத்தையோ பாடலாகப் பாடுவான். இது நாடகத் தனிமொழியாகும்"[4].

**புனித ஜோன் (Saint Joan)**

ஷாவின் மிகச் சிறந்த வெற்றிப் படைப்பு எனக் கூறுவது மிகையாகாது. ஷேக்ஸ்பியருக்குப்பின் அவருடைய ஸ்தானத்தில் இருந்துகொண்டு நாடகமியற்றியவர் எவருமிலர் என்பர். ஆனால் புனித ஜோனைப் பொறுத்த மட்டில் ஷேக்ஸ்பியருக்கிணையாக, இன்னும் சொல்லப் போனால் ஒரு படி மேலேயும் கூடச் சொல்லத்தக்க விதத்தில் பெர்னார்ட் ஷா இந்நாடகத்தைப் புணைந்துள்ளார் எனலாம். ஆறு காட்சிகளைக் கொண்ட இந்நாடகம் 1923 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 28ஆம் நாள் நியூயார்க்கிலுள்ள தியேட்டர் கில்டு (Theatre Guild) எனப்படும் மிகச்சிறந்த நாடகக் குழுவினரால் நியூயார்க்கில் முதன்முதலாக அரங்கேறியது. அதுவே உலக அரங்கமாகவும் இருந்தது. ஏனெனில் அதே நாளில் உலகமெங்கும் பரவலாக இந்நாடகம் முக்கிய அரங்குகளில் மேடையேற்றப்பட்டது. நியூயார்க்கில் அரங்கேறிய பின்புதான் இலண்டனில் மேடையேற்றப்பட்டது. 1924 இல்தான் அங்கு அரங்கேறியது.

**முடிவுரை**

ஜார்ஜ் பெர்னார்ட் ஷா பல நாடகங்கள் எழுதியிருந்தாலும் புனித ஜோன் இந்நாடகத்தில் ஷாவுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றிக்குப் பின்புதான் அவருக்கு நோபல் பரிசு கிடைத்தது. ஆம் 1924 இல் இந்நாடகம் நூலாக வெளியிடப் பெற்றதையடுத்து, 1925 இல் பெர்னார்ட் ஷாருக்கு நோபல் பரிசு கிடைத்தது என்பது குறிப்பிடத்தக்கது. ஜார்ஜ் பெர்னார்ட் ஷா, ஷேக்ஸ்பியரைப் போல கவிதை வரிகளில் நாடகமியற்றவில்லையென்றாலு, ஷேக்ஸ்பியருக்கு இணையாக வைத்துப் போற்றப்படும் மிகச்சிறந்த நாடகாசிரியர் என்பதை எவரும் மறுக்க இயலாது.

**மேற்கோள்கள்**

1. சா. கந்தசாமி, 'கசடதபற இதழ் தொகுப்பு', பக்கம்.49.
2. மேலது, பக்கம்.55.
3. அரங்க. சுப்பையா, 'இலக்கியத் திறனாய்வு : இசங்கள் - கொள்கைகள்', பக்கம்.124.
4. மேலது, பக்கம். 124.

**துணைநூற்பட்டியல்**

அருணாசலம், மு., - **‘தமிழ் இலக்கிய வரலாறு’**
காந்தி வித்தியாலயம்,
மாயூரம், தஞ்சை ஜில்லா, மார்ச் 1969.

கந்தசாமி, சா., - **‘கசடதபற இதழ் தொகுப்பு’**
கலைஞன் பதிப்பகம்,
10 கண்ணதாசன் சாலை,
தியாகராய நகர்,
சென்னை -600 017

நாஞ்சில் ஆனந்தன் - **‘சங்க இலக்கியத்தில் மனித உரிமைகள்’**
கண்மணி பதிப்பகம்,
திருச்சி - 620 002
1999.

சுப்பையா, அரங்க., - **‘இலக்கியத் திறனாய்வு : இசங்கள் - கொள்கைகள்’**
பாவை பப்ளிகேஷன்ஸ்,
142, ஜானி ஜான் கான் சாலை
இராயப்பேட்டை, சென்னை - 600 014.